# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, வான்படை (திருத்தச்) சட்டம்

---

*(1993, மார்ச் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---


1993 மார்ச் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

**1993 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, வான்படை (திருத்தச்) சட்டம்.**

[1993, மார்ச் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 10/91

**வான்படைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, வான்படை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வான்படைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அஅ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:— *359 ஆம் அத்தியாயத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(அஅஅ) (i) விதித்துரைக்கப்பட்ட தவறொன்று தொடர்பாக அவருக்கெதிராகத் தொடரப்பட்ட நீதிசார் அல்லது ஒழுக்காற்று வழக்கு நடவடிக்கைகள் முடியும்வரை அவரது பதவியைப் பிரயோகிப்பதிலிருந்து அவர் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போதான ஏதேனும் காலப்பகுதி தொடர்பிலான எல்லாச் சம்பளங்களும் படிகளும்; அத்துடன்

(ii) வேறேதேனும் தவறு தொடர்பாக அவருக்கெதிராகத் தொடரப்பட்ட நீதிசார் அல்லது ஒழுக்காற்று வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும்வரை அல்லது பதவியைப் பிரயோகிப்பதிலிருந்து அவர் இடைநிறுத்திவைக்கப்பட்டிருக்கும் போதான ஏதேனும் காலப்பகுதியின் ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அம் மாதத்திற்கான அவரது சம்பளத்தினதும் படிகளினதும் அத்தகைய பாகம்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அவ்வுட்பிரிவின் பந்தி (அஅ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலம் :—

"(அஅஅ) (i) விதித்துரைக்கப்பட்ட தவறொன்று தொடர்பாக அவருக்கெதிராகத் தொடரப்பட்ட நீதிசார் அல்லது ஒழுக்காற்று வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும்வரை அவரது கடமைகளிலிருந்து அவர் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போதான ஏதேனும் காலப்பகுதி தொடர்பிலான எல்லாச் சம்பளங்களும் படிகளும்; அத்துடன்

2—ட 24948—1,270 (10/92)

(ii) வேறேதேனும் தவறு தொடர்பாக அவருக்கெதிராகத் தொடரப்பட்ட நீதிசார் அல்லது ஒழுக்காற்று வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும் வரை அவரது கடமைகளிலிருந்து அவர் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் போதான ஏதேனும் காலப்பகுதியின் ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அம் மாதத்திற்கான அவரது சம்பளத்தினதும் படிகளினதும் அத்தகைய பாகம்;" அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் காப்புவாசகம் (1) இல் "இவ்வுட்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய கழிப்பனவுகளின் மொத்தத் தொகை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இவ்வுட்பிரிவின் (அ), (அஅ), (அஅஅ), (ii), (ஆ), (இ), (ஈ), (உ), (ஊ), அத்துடன் (எ) என்னும் பந்திகளினால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய கழிப்பனவுகளின் மொத்தத் தொகை" என்னும் சொற்களை இடுவதன் மூலம்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.